# தமிழ்நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக் கூறும் அகழாய்வு!

## தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அகழாய்வு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழாய்வு குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள பதிவை மேற்கோளிட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தமிழரின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக் கூற நாம் மேற்கொண்டுள்ள பயணம் சரியான திசையில் செல்வதை, இந்த அகழாய்வுகள் உறுதி செய்கின்றன!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

**தடைகளைக் கடந்து தரவுகளைச் சேகரிக்கிறோம்!**

**மூடியுடன் பானை, பாசிமணிகள், சுடுமண் கிண்ணங்கள் தொட்டி, உறை கிணறு, வெள்ளியிலான முத்திரைக் காசு, சிவப்பு வண்ணக் கொள்கலன், தமிழிபானை ஓடு, இரும்பிலான ஏர்க் கலப்பையின் கொழுமுனை, தக்களி, தந்தத்தாலான பகடைக்காய், சுடுமண் சிற்பம், உணவுக் கிண்ணம், செம்பினாலான அஞ்சனக்கோல் - ஆணி என இப்படித் தொடர்ந்து அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் பொருட்கள்,**



**தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக்கூற நாம் மேற்கொண்டுள்ள பயணம் சரியான திசையில் செல்வதை உறுதி செய்கிறது!**

**இந்தியத் துணைக்கண்ட வரலாறு தெற்கிலிருந்து தொடங்கி எழுதப்பட வேண்டும் என்ற நம் முழக்கம் மெய்ப்படப் பணிகளைத் தொடர்வோம்!**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் 11 புதிய பேருந்து இயக்கத்தை நேற்று முன்தினம் (21.07.2024) தொடங்கி வைத்தார். அருகில் ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி மு.அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிஸ்வரன், நகர் மன்ற உறுப்பினர் கண்ணன். பொது மேலாளர் துரைச்சாமி, வணிக மேலாளர் சக்தி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முழுமையான சோதனை முடிவதற்கு முன்பாகவே விற்பனைக்கு வரும் மருந்துகள்!

# மக்களின் உயிரோடு விளையாடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்திடுக!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 23-

விதிகளுக்குப் புறம்பாக புதிய மருந்து சோதனைகளைச் செய்தும், முழுமையான சோதனைகளைச் செய்யாமலும் மருந்துகளை தயாரித்து விற்பனை செய்து மக்களின் உயிரோடு விளையாடும் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தினார்.



இது தொடர்பாக ஜூலை 22 அன்று மாநிலங்களவையில் நேரமில்லா நேரத்தின்போது அவர் பேசியதாவது:

தேசிய நோய்க் கிருமிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமான நெறிமுறைகளை வகுத்துக் கண்காணிக்கும் குழு, இந்திய மக்களின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை எழுப்பியிருப்பது பற்றி இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

நோய்களை குணப்படுத்தும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, அதை முழு அளவில் உற்பத்தி செய்து விற்பனைக்கு கொண்டுவரும் முன்பாக நடத்தப்படும் பரிசோதனைகளில் நடைபெறும் மிகப்பெறும் மோசடி மற்றும் விதி மீறல்கள் பற்றி அந்தக் குழுவினர் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக மார்பகப் புற்றுநோய்க்கான மருந்தை கண்டுபிடித்து, அந்த மருந்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை மனிதர்களிடத்தில் சோதித்துப்பார்க்கும் முக்கியமான விஷயத்தில் ஒரு மருந்து தயாரிப்பு நிறுவனம் மிக அலட்சியமாக நடந்து கொண்டதை விசாரிக்கும்படி இந்திய மருந்து கட்டுப்பாட்டு தலைமை இயக்குனருக்கு புகார் வந்துள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆயிரம் பேரிடம் சோதனை நடத்தப்பட வேண்டும் என்று விதி இருக்கும்போது சில நூறு பேரிடம் கூட சோதனைகள் நடப்பதில்லை என்று தகவல்கள் வருகின்றன.

எந்த ஒரு மருந்தையும் உற்பத்திக்கு முன்பாக சோதனை செய்யும்போது முதலில் தேசிய அளவில் உள்ள சோதனைப் பதிவேட்டு அமைப்பில் பதிவு செய்ய வேண்டும். இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மருந்தின் நம்பகத்தன்மை மற்றும் அதன் அறிவியல்பூர்வமான சோதனை முடிவுகள்தான். இவைதான் அந்த மருந்தின் தரம் பற்றிய உச்சபட்ச தரக் குறியீடு. இதில் ஏதேனும் ஒரு இடத்தில் சிறு தவறு நடந்தால் கூட அது கோடிக் கணக்கான மக்களின் உயிரோடு விளையாடும் ஆபத்து இருக்கிறது.

**சந்தேகம் எழுகிறது!**

கண்டுபிடிக்கப்பட்ட புதிய மருந்தை தருவித்து ஆரம்பகட்ட பரிசோதனைகள் முடிந்த பிறகே மனிதர்களிடத்தில் அதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்பது விதி. ஆனால் சமீபத்தில் ஒரு மருந்து நிறுவனம், கண்டுபிடிக்கப்பட்ட புதிய மருந்து தங்கள் கைகளுக்கு கிடைத்த நான்கு மாதங்களுக்கு முன்பாகவே இவர்களாகவே மனிதர்களிடத்தில் சோதனை நடத்தி சான்று பெற்றிருக்கிறார்கள். இது எப்படி சரியாகும்? அது உண்மையிலேயே நோயை குணப்படுத்தும் மருந்துதானா என்று சந்தேகம் எழுகிறது.

இன்னொரு நிறுவனம் தயாரித்துக்கொண்டிருந்த மருந்தை சோதனை செய்த அதிகாரிகள் அவற்றை இந்தியாவில் விற்பனை செய்யக் கூடாது என்று தடை விதித்தார்கள். அவற்றை கென்யா நாட்டிற்காக தயாரிப்பதாகச் சொல்லிவிட்டு மிகப்பெரிய அளவில் தயாரான அந்த மருந்தை சட்ட விரோதமாக இந்தியாவில் தொடர்ந்து விற்பதாகவும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

பெரிய மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் இயங்கக்கூடிய நெறிமுறைக் குழுக்கள் செயலற்றுப் போய்விட்டதாகவும்; பெயரளவுக்கே அவை இருப்பதாகவும் மருத்துவமனைகளுக்கான தரக் கட்டுப்பாட்டு வாரியமும், இந்திய தரக் கட்டுப்பாட்டு அமைப்பும் குற்றம் சாட்டியுள்ளன.

**உயிர் பறிபோகும் ஆபத்திருக்கிறது!**

இந்த நிலை தொடர்ந்தால், பரிசோதனை முடிவுகள் பற்றிய ஆய்வுகள் அத்தனையும் தவறானதாகவே கிடைக்கும். அது மனிதர்களின் ஆரோக்கியத்தில் கேட்டை விளைவித்து உயிரைப் பறிப்பதில் போய் முடியும் ஆபத்து இருக்கிறது.

இதில் இன்னொரு வேதனையான விஷயம் என்னவென்றால், மருந்து தயாரிப்பு விஷயங்களில் விதிகளை முறையாகப் பின்பற்றாத 35 மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் சுமார் 1000 கோடி ரூபாய்க்கு தேர்தல் நிதிப் பத்திரங்களை வாங்கி, மத்தியிலும், மாநிலங்களிலும் உள்ள செல்வாக்கான அரசியல் கட்சிகளுக்கு வழங்கியிருப்பதை தேர்தல் ஆணைய ஆவணங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இவற்றில் ஏழு நிறுவனங்கள் மீது தரம் குறைவான மருந்துகளை கையாள்வதாக விசாரணை நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி தேர்தல் நிதி அளித்தால் தாங்கள் செய்யும் தவறுகளில் இருந்து மத்திய அரசு தங்களைக் காப்பாற்றும் என்று இவர்கள் நினைத்தால், அதைப் பொய்யாக்கும் வகையில் தவறு செய்யும் மருந்து நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; தவறான, முழுமையற்ற மருந்து சோதனைகளை நடத்தி சில மருந்து நிறுவனங்கள் மக்களின் உயிரோடு விளையாடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்ல, ஒரு மருத்துவராகவும் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

### கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில்

# பாலூரில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு திருவிழா!

நாகர்கோயில், ஜூலை 23-

கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பாலூர் ஆசான் அரங்கில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா 21.07.2024 அன்று மாலை நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் எழுபது அரசு பள்ளி மாணவர்களுக்கு தி.மு.க. மேற்கு மாவட்ட அயலக அணி சார்பில் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா விழாவுக்கு தலைமை ஏற்று அயலக அணியின் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை ஆற்றினார். நலத்திட்ட உதவிகளுக்கான ஏற்பாடுகளை செய்த தலைமை செயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ் மற்றும் கழக முன்னோடிகளுக்கு நன்றி பாராட்டப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக சவுதி அரேபியாவில் இருந்து சமூக சேவகர் மற்றும் NRTIA அமைப்பாளர்களுமான மயிலாடுதுறை வெங்கடேஷ், திருச்சி ஆரிப் மக்பூல் மற்றும் பிரான்ஸ் நாட்டு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் ஜெகனாத் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட தி.மு.க. அயலக அணி தலைவர் திருவை நசீர் அவர்கள் நன்றி கூறினார். குழித்துறை அயலக அணி அமைப்பாளர் தாணு பிள்ளை வரவேற்புரை ஆற்றினார்கள். அயலக அணி ஒன்றிய அமைப்பாளர்கள் சேவியர் மற்றும் எட்வின் தங்கம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள். அயலக அணி துணை அமைப்பாளர்கள் திருமதி. கில்டா மோகன்தாஸ் மற்றும் திருமதி. பொன் பத்மா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.

ஒன்றிய செயலாளர்கள் டி.பி. ராஜன், கோபால், அட்வக்கேட் ராஜேஷ்குமார், அட்வக்கேட். ஜாண் பிரைட், மாஸ்டர் மோகன், அருளானந்தராஜ், அட்வக்கேட். ஜாண்சன், ஷைனி கார்டன், அட்வக்கேட். றாபி மற்றும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி நிர்வாகிகள் சுனிதா சத்தியராஜ், கிஷோர், ஜாண்கிளின், கவாஸ்கர் தக்கலை ரவி, மஸ்கட் செல்வகுமார், எட்வின் ஜோஸ், ஷாஜி, ஷஜின், மோகன்தாஸ், மஸ்கட். சாஜி தியோடர், சுரேஷ்குமார், ஸ்னேகா மற்றும் நகரச் செயலாளர்கள் ரமேஷ், வினுகுமார் ஆகியோருக்கு அயலக அணி சார்பில் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாவட்ட அவைத்தலைவர் சிசுகுமார், மாவட்ட பொருளாளர் ததேயு பிரேம்குமார், பேரூர் செயலாளர் சத்தியராஜ், பேருராட்சி தலைவிகள் ஷீலா, சத்தியராஜ், மனோஜ், துரைராஜ், தங்கதுரை, சரளா கோபால் ஊராட்சித்தலைவர் அஜித்குமார் அணிகள் சார்பாக ஜீட்தேவ், ரெனிட்டஸ், சுரேஷ்குமார், அமல்ராஜ் மற்றும் குவைத் ஆல்பின், சோழராஜன், பின்ஸ், அனைத்து குமரி மேற்கு மாவட்டத்தை சார்ந்த பேரூர் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், ஒன்றிய நகர பொறுப்பாளர்கள், மாணவ மாணவிகள், பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கூட்டத்தில் அணி அமைப்பாளர் பாலூர் தேவா கொண்டு வந்த தீர்மானங்களை அனைவரும் கர ஒலி எழுப்பி நிறைவேற்றினர்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. அயலகத்தில் வாழும் இந்திய தமிழர்கள் அகால மரணமடைந்து அவர்களது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் போது ரூ. 1,00,000 உடனடியாக நிவாரணமாக வழங்கி அரசு உதவ வேண்டும்.

2. மேற்கூறிய தீர்மானத்தின் தொடர்ச்சியாக இந்த மாதத்திலிருந்து குமரி மாவட்டத்தை சார்ந்து அயலகத்தில் மரணமடையும் தமிழர்களுக்கு அமல்படுத்த, ஆவன செய்ய அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

3. கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு அயலக தமிழர் நல வாரியம் அமைத்து நடைமுறை படுத்தி வருகிறது. ஆனாலும் அரசு அறிவித்த நலத்திட்டங்கள் இதுவரை துவங்க படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பலர் அயலகத்தில் அகால மரணமடைந்து, தாயகம் கொண்டு வந்து அடக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். அந்த குடும்பத்தினருக்கு சேர வேண்டிய நிவாரணங்களை அரசு வழங்கிட வேண்டுமென கேட்டு கொள்ளப்படுகிறது.

4. குமரி மாவட்ட தொழிலாளர்கள் சிலர் அயல் நாடுகளில் சட்ட விரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு நீண்டகால சிறை வாசத்தில் சிக்கி கொள்கிறார்கள். அதனால் அவர்களின் இளவயது மனைவி மற்றும் சிறு குழந்தைகள் வாழ்வாதாரத்தை இழந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றார்கள். இக்குடும்பத்தவருக்கு, கணவர் திரும்பி வரும்வரை அரசு உதவித்தொகை அளித்து, ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தி.மு.க. மீனவர்அணி

## நாகை மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க.மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

நாகை மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.கே.ஜி.ஏ.சேகர் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எஸ்.பாலமுரளி** (3/188, மாரியம்மன் கோவில் தெரு, அக்கரைப்பேட்டை, வடக்கு பொய்கைநல்லூர் அஞ்சல், நாகப்பட்டினம் - 611 106.) அவர்கள் நாகை மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டமாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்** |
| சென்னை - 18 | செயலாளர் |
| நாள்- 22.07.2024 | தி.மு.க. மீனவர் அணி. |



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி 35வது வார்டுக்குட்பட்ட நாகர்கோவில், தெ.தி. இந்து கல்லூரி அருகில் அமைந்துள்ள ஸ்ரீ அவிட்டம் திருநாள் மகாராஜா மைதானத்தில் ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குப்பை மறுசுழற்சி மையம் அமைக்க கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர்கள் திருமதி. கு.அகஸ்டினா கோகிலவாணி, பா. முத்துராமன், உதவி பொறியாளர் திருமதி. ராஜசீலி, இளநிலை பொறியாளர் ராஜா, திருமதி. தேவி, சுகாதார அலுவலர் முருகன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜெ. ராணி, ஜெ.சி. நவீன்குமார், மாநகராட்சி அதிகாரிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். சதாசிவன், பகுதி செயலாளர் த. ஜீவா, வட்டச் செயலாளர் சி. ராமகிருஷ்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. வர்த்தகர்அணி


## திருநெல்வேலி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பண்ணை பி.முருகன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப்பதிலாக, **ஏ.ஆர்.ரஹ்மான்**, (3/225, வடக்குத் தெரு, விஜயாபதி, திருநெல்வேலி மாவட்டம் - 627 104.)அவர்கள் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **காசிமுத்துமாணிக்கம்** |
| சென்னை - 18 | செயலாளர் |
| நாள்- 22.07.2024 | தி.மு.க. வர்த்தக அணி |



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது. அதன்படி மேலப்பாளையம் பகுதி 41வது வட்டச் செயலாளர் கிங் பாலா, மாநகர மகளிரணி தலைவர் ஜோஸ் வனிதா ஆகியோர் ஏற்பாட்டில் என்.ஜி.ஓ.காலனி பொதிகை நகர் மூன் மஹால் எதிரில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்வு மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று கழக கொடியேற்றி இனிப்பு வழங்கினார். நிகழ்வில் ஸ்டார் முருகன், ஜான்கென்னடி, ராபர்ட் செல்லையா, ஷெட்டி, அந்தோணி ராஜ், வினோத், வேலாயுதம், செல்வபெருமாள், ஹைகோர்ட் மகாராஜா, பத்மா, சௌந்தரம், மேரி,பிந்து,பிச்சாண்டி, லியோ மேத்யூ,தங்கராஜ், பிரேம்குமார், தன்ராஜ், ராஜா, லைனல் ராபர்ட் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.